# மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஜப்பான் ரூ.4,770 கோடி நிதியுதவி

சென்னை, டிச. 22: சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக ஜப்பான் நாட்டு கூட்டுறவு ஏஜென்சி ரூ.4,770 கோடி நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், மெட்ரோ ரயில் முதல் கட்டப் பணிகள் கடந்த 2008-ஆம் ஆண்டு தொடங்கியது. 52.4 கி.மீ. தொலைவுக்கு ரயில் போக்குவரத்து திட்டமிடப்பட்டது. அதற்காக ஜப்பான் நிறுவனம் ரூ.11,000 கோடி கடனுதவி வழங்கியது. 2015-ஆம் ஆண்டு மெட்ரோ ரயில் முதல்கட்ட சேவை தொடங்கப்பட்டது. தற்போது, கோயம்பேடு, ஆலந்தூர் மற்றும் சின்னமலை-விமான நிலையம் வரை உயர்மட்டப் பாதையிலும், சென்ட்ரல்-திருமங்கலம், சைதாப்பேட்டை-டி.எம்.எஸ். வரை சுரங்கப்பாதையிலும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இதைத்தொடர்ந்து, ஜப்பான் நிதி உதவியுடன் ரூ.85,000 கோடி செலவில் 108 கி.மீ. தொலைவில் 116 மெட்ரோ ரயில்நிலையங்களை உள்ளடக்கிய 2-ஆம் கட்ட பணிகள் குறித்து அறிவிப்பு வெளியானது. 3-ஆவது வழித்தடங்களில் இந்த 2-ஆம் கட்ட விரிவாக்கப்பணிகள் நடைபெறுகின்றன.

மாதவரம்-சிப்காட் இடையே 46.1 கி.மீ. தொலைவில் 50 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதில், இந்திராரோடுசந்திப்புதொடங்கி சிப்காட் வரை 22 மெட்ரோ நிலையங்கள் உயர்மட்டப் பாதையிலும், கோயம்பேடு-கலங்கரை விளக்கம் இடையே 17.1 கி.மீ. தொலைவிலான வழித்தடத்தில் 20 மெட்ரோ நிலையங்கள் சுரங்கப்பாதை வழியாகவும் அமைக்கப்படவுள்ளன.

இதுபோல, மாதவரம்-சோழிங்கநல்லூர் இடையே 46 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமையவுள்ளன. குறிப்பிட்ட வழித்தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கத்துக்கான பரிசோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்துக்கான விரிவான வரைபடம் தயாரிக்கப்படுகிறது.

இந்நிலையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கப் பணிகளுக்காக ஜப்பான் அரசு ரூ.4,770 கோடி நிதி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய பொருளாதார விவகாரத்துறை கூடுதல் செயலாளர் மொகாபாத்ரா மற்றும் ஜப்பான் கூட்டுறவு ஏஜென்சியின் தலைவர் மட்சுமோட்டோ இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியது: சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்துக்கு நிதி உதவி அளிக்க ஜப்பான் கூட்டுறவு ஏஜென்சி ஒப்புதல் அளித்துள்ளது.

மாதவரம்-சோளிங்கநல்லூர் இடையே 35.67 கி.மீ. தொலைவிலும், மாதவரம்-கோயம்பேடு இடையே 16.34 கி.மீ. தொலைவிலும் என மொத்தம் 52.01 கி.மீ. தொலைவுக்கு ரூ.40,941 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ரூ.4,770 கோடி நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது என்றார் அவர்.